# “புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களும், அவர்களின் பெற்றோர்களும் எதிர் கொள்ளும் மன அழுத்தம் ஓர் ஒப்பீட்டு ரீதியான ஆய்வு” (நல்லூர் கோட்டப் பாடசாலைகளை மையமாகக் கொண்ட ஆய்வு)

அருள் றொசான்[1] மற்றும் பெர்ணான்டோ மரியநாயகம்[2]

[1]உளவியல் சிப்புக்கலைமாணிபட்டதாரி, யாழ்பல்கலைக்கழகம்.
[2]மன்/பெரியபண்டிவிரிச்சான் மகா வித்தியாலயம், மடுகோயில்,மன்னார்.

**ஆய்வுச்சுருக்கம்**

புலமைப் பரிசில் பரீட்சைகுத் தயாராகும் மாணவர்களும், அவர்களின் பெற்றோர்களும் எதிர் கொள்ளும் மனஅழுத்தம் ஓர் ஒப்பீட்டு ரீதியான ஆய்வு என்னும் தலைப்பில் அமையும் இவ் ஆய்வானது யாழ் மாவட்ட பாடசாலைகளின் நல்லூர் கோட்டப் பாடசாலைகளை மையமாகக் கொண்டு விளங்குகின்றது. ஆய்வுப் பிரதேசத்தில் பல எண்ணிக்கையான புலமைப்பரிசில் மாணவர்கள் மற்றும் அவர்களைத் தயார் செய்யும் பெற்றோர்களும் காணப்படுகின்றார்கள். இவற்றில் இருந்து நல்லூர் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளின் தரங்களுக்கமைவாக ஆய்வாளரால் தெரிவுசெய்யப்படும் எண்ணிக்கைக்கமைவாக மொத்தமாக 223 மாணவர்களும், 223 பெற்றோர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். எழுமாறாக ஆண், பெண் மாணவர்களும், எழுமாறாக ஆண் மற்றும் பெண் பெற்றோர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆய்வுப்பிரதேசத்தில் 32 பாடசாலைகளில் புலமைப்பரிசிலினை எதிர் கொள்ளும் மாணவர்கள் காணப்படுகின்றார்கள். இவற்றில் இருந்து பாடசாலைகளின் தரத்திற்கமைவாக எழுமாறாக மாணவர்களும் அவர்களின் பெற்றோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவ் ஆய்வினை மேற்கொள்வதற்கு தரவு சேகரிப்பு முறைகளாக, முதலாம்நிலை தரவுஆகும். இதில் ஆய்வாளாரால் சுய விபரண ஆய்வு வினாக் கொத்து தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் இரண்டு பகுதிகள் உள்ளடக்கப்படும் முதல் பகுதியில் தனிப்பட்ட விபரங்களும் இரண்டாம் பகுதியில் பொதுவான வினாக்களை உள்ளடக்கியதாகவும் அமைந்துள்ளது. அத்துடன் அவதான முறை, நேர்காணல் முறை என்பன பயன் படுத்தப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத் தரவு. இவ் இரண்டாம் நிலைத் தரவில் சஞ்சிகைகள், ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மற்றும் பத்திரிகைகள் என்பவற்றில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. வினாக்கொத்தின் புள்ளிகள் பற்றிய அமைப்பு விடயமானது வினாக்கொத்துக்களின் அடிப்படையில் புள்ளிகள் பிரிக்கப்பட்டுள்ளன. இது ஆய்வாளரால் வினாக்களின் மொத்தப்புள்ளிகளின் அடிப்படையிலும், மாதிரியாளர்களின் எண்ணிக்கையினையும் அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆய்வுமேற்கொள்ளும் முறைபெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் விபரன முறையிலும் மற்றும் Statistical Packages For Social Science Package (SPSS) மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு அட்டவணைப்படுத்தப்படுகிறது. இதன் மூலம் பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் கருதுகோள்கள் பல ஏற்றுக்கொள்ளப்பட்டு சில நிராகரிக்கப்பட்டுள்ளன. இவ் அடிப்படையில் ஆய்வின் முடிவாக புலமைப்பரிசில் பரீட்சையினை எதிர் கொள்ளும் மாணவர்களும் மற்றும் அவர்களை தயார் செய்யும் பெற்றோர்களும் மனவழுத்ததினை ஏதிர் கொள்கின்றார்கள். இதில் பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

**திறவுச் சொற்கள்:-** புலமைப்பரிசில் பரீட்சை, மாணவர்கள், மனவழுத்தம், பெற்றோர்கள், ஆய்வாளன்.